அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
ANG MO KIO TAMIL METHODIST CHURCH

# திருவிருந்து ஞாயிறு ஆராதனை / Holy Communion Sunday

*3rd Sep 2023, 9.30am*

✝ ஆராதனைக்கு அழைப்பு — திருமதி. செல்வினி தேவானந்தன்
Call to Worship — Mrs. Selvini Devanandan

மௌன தியானம்
Silent Meditation

இறை வணக்கப் பாடல் — பாடகர் குழு
Introit — Choir

ஜெபம் — திருமதி. செல்வினி தேவானந்தன்
Prayer — Mrs. Selvini Devanandan

✝ தொடக்கப் பாமாலை — சபையார்
Opening Hymn (On Screen) — Congregation

தூய்மை பெற நாடு

1. தூய்மை பெற நாடு கர்த்தர் பாதமே
நிலைத்தவர் வார்த்தை உட்கொள்ளென்றுமே
கூடி பக்தரோடு சேர்ந்தோர் தாங்குவாய்
யாவிலுமே தெய்வ தயை நாடுவாய்

2. தூய்மை பெற நாடு லோகக் கோஷ்டத்தில்
தனித்திரு நாளும் அவர் பாதத்தில்
யேசுவைப்போலாவாய், நோக்கின் அவரை
பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை

3. தூய்மை பெற நாடு கர்த்தர் நடத்த
என்ன நேரிட்டாலும் அவர்பின் செல்ல
இன்பம் துன்பம் நேர்ந்தும் விடாய் அவரை
நோக்கியவர் வாக்கில் வைப்பாய் நம்பிக்கை

4. தூய்மை பெற நாடு ஆத்மா அமர்ந்து
சிந்தை செய்கை யாவும் அவர்க்குட்பட்டு
அன்பின் ஜீவ ஊற்றை சேர்த்து ருசிக்க
முற்றும் தூய்மையாவாய் விண்ணில் வசிக்க.

✝ பொதுவான பாவ அறிக்கை (திரையில்) — சபையார்
Prayer of Confession — Congregation

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப் போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தோம். எங்களுக்குச் சுகமே இல்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத் தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை உண்டாகும்படி, நாங்கள் இனித் தேவபக்தியும் நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்து வர, இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

✝ அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம் (பாடலாக) (திரையில்)
The Apostles' Creed — Congregation சபையார்

உலகும் வானும் செய்தாளும் ஒப்பில் சர்வ வல்லவராய்
இலகு மருளாம் தந்தையாம் எம்பிரான்றனை நம்புகிறேன்

அவரொரு பேறாமைந்தனுமாய் ஆதிமுதலெங் கர்த்தனுமாய்
தவறிலேசுகிறிஸ்துவையும் சந்ததமே யான் நம்புகிறேன்

பரிசுத்தாவி அருளதனால் படிமேல் கன்னிமரியிடமாய்
உருவாய் நரர் அவதாரமாய் உதித்தாரெனவும் நம்புகிறேன்

பொந்து பிலாத்ததிபதி நாளில் புகலரு பாடுகளையேற்றி
உந்துந் சிலுவையறையுண்டு உயிர்விட்டாரென நம்புகிறேன்

இறந்தே அடங்கிப்பாதாளம் இறங்கி மூன்றாந் தினமதிலே
இறந்தோரிட நின்றே உயிரோ டெழுந் தாரெனவும் நம்புகிறேன்

சந்ததமோட்சம் எழுந்தருளிச் சருவ வல்ல பரனான
எந்தை தன்வல பாரிசமேயிருக்கின்றாரென நம்புகிறேன்

உயிருள்ளோரை மரித்தோரை உத்தமஞாயந் தீர்த்திடவே
ஜெயமாய்த் திரும்ப வருவாரெனச் சிந்தையார நம்புகிறேன்

பரிசுத்தாவியை நம்புகிறேன் பரிசுத்தமாபொதுச் சபையும்
பரிசுத்தர்களின் ஐக்கியமும் பரிவாயுண்டென நம்புகிறேன்
பாவ மன்னிப்புளதெனவும் மரித்தோருயிர்தெழு வாரெனவும்
ஓவா நித்ய ஜீவனுமே உளதெனவும் யான் நம்புகிறேன்
ஆமென்.

## இறையாசனத்தண்டை வருகை / APPROACHING GOD'S THRONE

சிறுவர்க்கான ஜெபம் — மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Prayer for Children — Rev. Albert Vijay Joseph

ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம் — மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Thanksgiving & Pastoral Prayer — Rev. Albert Vijay Joseph

கர்த்தருடைய ஜெபம் (பாடலாக) (திரையில்) — சபையார்
Lord's Prayer — Congregation

பரத்தில் எங்கள் பிதாவே

பரத்தில் எங்கள் பிதாவே
பரிசுத்தமானவரே
உம் இராஜியம் வருவதாக
உம் சித்தம் நிறைவேறவே

இந் நாள் ஆகாரத்தை
எங்களுக்கு நீர் தாரும்
நீரே ஜீவனின் அப்பம்
அதுவே எங்கள் பெலனே

எங்கள் கடனாளிகளை
நாங்கள் மன்னிப்பது போல
நீரோ எங்கள் பாவ
கடன்களை மன்னித்தருளும்

சாத்தானின் வலையில் நீர் காத்து
தீங்கினின்று இரட்சியும்
மகிமை வல்லமையாய்
என்றென்றைக்கும் ஆக

ஆமென் … ஆமென் … ஆமென் .

## இறைவனுக்கு அளித்தல் / GIVING TO GOD

✝ காணிக்கைப் பாடல் (திரையில்) — சபையார்
Offertory Song (On Screen) — Congregation

கர்த்தரின் கை குறுகவில்லை

1 கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் வாழ்ந்திடவே
சுதனருள் புரிந்தனரே

விசுவாசியே நீ பதறாதே!
விசுவாசியே நீ கலங்காதே!
விசுவாசத்தால் நீதிமான்
இன்றும் என்றும் பிழைப்பான்

2 பரிசுத்த ஆவியானவரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்
கிருபையிலே வளர்ந்திடுவோம்
வரங்களை நாடிடுவோம் - விசுவாசியே

3 நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் யேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய்
தம்முடன் சேர்த்துக் கொள்வார் - விசுவாசியே

4 மேகம் போன்ற வாக்குத்தத்தம்
சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன்னேறிடுவாய் - விசுவாசியே

✝ பூலோகத்தாரே யாவரும் — சபையார்
Doxology — Congregation

## இறை வார்த்தைக்கு செவிமடுத்தல் / LISTENING TO GOD'S WORD

✝ திருமறைப் பாடம் — மத்தேயு 16:13-20 — திருமதி. சாந்தி மைக்கேல்
Scripture Lesson — Matt 16:13-20 — Mrs. Shanti Michael

அருளுரை — மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Sermon — Rev. Albert Vijay Joseph

## Statement of Faith

✝ ஆயத்தப் பாடல் (திரையில்) — சபையார்
Preparatory Song (On screen) — Congregation

இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை

சரணங்கள்

1 இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை
என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்
சிங்கத்தின் வாயினின்றும் இரட்சிப்பார்
பங்கம் வராதென்னை ஆதரிப்பார்

பல்லவி

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
நம்பினோரைக் கிருபை சூழ்ந்திடுதே
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்துன்னை நடத்துவார்

2 நாசியில் சுவாசமுள்ள மாந்தரை
நம்புவதல்ல தம் ஆலோசனை
கோர பயங்கர காற்றடிக்கும்
கன்மலைமேல் கட்டும் வீடுநிற்கும் - நெஞ்சமே

3 விஸ்வாசத்தால் நீதிமான் பிழைப்பான்
வறட்சி மிகுந்த காலத்திலும்
பக்தன் வலது பாரிசத்திலே
கர்த்தன் தாம் நிற்பதால் அசைந்திடான் - நெஞ்சமே

4 இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெற்றே
ஏகிப்பறந்திடும் பக்தரோடே
சேர்ந்தென்றும் வாழ்ந்திடும் ஐக்யத்திலே
ஜெயகெம்பீரமே உனக்குண்டே - நெஞ்சமே

5 அங்கே அநேக வாசஸ்தலங்கள்
அன்பின் பிதா வீட்டில் ஜொலிக்குதே
நேர்த்தியான இடங்களில் உந்தன்
நித்தியபங்கு கிடைத்திடுமே - நெஞ்சமே

திருவிருந்து ஆராதனை முறைமை, மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Order of Holy Communion Rev. Albert Vijay Joseph
தேவ ஆராதனை புத்தகம் பக்கம் 104

போதகர் : உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

சபையார் : எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

போதகர் : நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடவோம்.

சபையார் : அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

போதகர் : கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறது தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது. ஆதலால் தூதரோடும், பரம சபையனைத்தோடும் நாங்கள் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி,

எல்லாரும் : சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர்,பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று, இடைவிடமால் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம், ஆமென்.

போதகர் : சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் பரமபிதாவே, தேவரீர் எங்கள்மேல் உருக்கமாய் இரங்கி, உம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக்கொள்ளும்படி, அவரைத் தந்தருளினீரே; அவர் சிலுவையிலே ஒரே தரம் தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்வதற்கு நிறைவும், பூரணமும், போந்ததுமான பலியைச் செலுத்தினதுமல்லாமல், தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அனுசரித்து வரும்படி தமது பரிசுத்த சுவிசேஷத்தில் கட்டளையிட்டருளினாரே.

இரக்கமுள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளி உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த நியமத்தின்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும், மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் நினைவுகூர்ந்து, உமது சிருஷ்டி பதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் வாங்கும்போது, அவர் மூலமாய் தெய்வசுபாவத்துக்கு நாங்கள் பங்குள்ளவர்களாகும்படி கிருபை செய்தருளவேண்டுமென்று மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

அப்படியே, இராப்போஜனம் பண்ணின பின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்; இதைப் பானம் பண்ணும்பொழுதெல்லாம், என்னை நினைவுக்கூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார். ஆமென்.

எல்லாரும்: இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் இந்த உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல், தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேசையின்கீழ் விழும் துணிக்கைகளையாகிலும் பொறுக்கிக் கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல. ஆகிலும் தேவரீர், எப்பொழுதும் இரக்கஞ்செய்யத் தவறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆன தன்மையினால் காருண்ணிய கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் பரிபூரண ஜீவியத்தால் நாங்கள் நிரப்பப்படவும், அவருடைய சாயலில் நாங்கள் வளரவும், அவரிடத்தில் நாங்களும் எங்களிடத்தில் அவரும் எப்பொழுதும் வாசமாயிருப்பதற்கும், ஏற்ற விதமாய் இந்தப் பரிசுத்த நற்கருணையில் பங்குபெற எங்களுக்கு கிருபை செய்தருளும். ஆமென்.

லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்,
லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்,
லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, உமது சமாதானத்தைத் தாரும்.

அறிவிப்புகள் — திரு. சாம்ராஜ் ஆசிர் ஜெயராஜ்
Announcements — Mr. Samraj Asir Jeyaraj

✝ ஜெபம் & ஆசீர்வாதம் — மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Closing Prayer & Benediction — Rev. Albert Vijay Joseph

✝ ஆசீர்வாதப் பாடல் — சபையார்
Benediction Song — Congregation

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா
ஆ அல்லேலூயா (4)

✝ ***Indicates Congregation standing*** / சபையார் நிற்கவும்

Birthday list
1. Mr. Robert Vasanth - 5th Sep
2. Mr. Solomon Sampath - 6th Sep
3. Pastor Vijay Joseph - 6th Sep
4. Mr. Amos Raj - 6th Sep
5. Master Jonas Jestin Prabhakar - 7th Sep
6. Mr. Edwin Mathuram - 7th Sep
7. Mr. Bobby Rajaratnam - 8th Sep

Wedding Anniversary list
1. Mr. Anton Moses & Mrs. Menaka Anton - 6th Sep
2. Mr. Gopi & Mrs. Geetha Gopi - 8th Sep